ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2131/31 - 2019 ජූලි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.07.11
2131/31 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2019 ஆம் ஆண்டின் 129 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/6/2018/எச்டபிள்யு/380.
பிர. செ. குறிப்பு இல. : 6/3/1/509.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூன் 24.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், ஹொரணை.

2. **காணியின் விபரம்** : மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை பிரதேச செயலாளர் பிரிவில், தலகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2019.03.18 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபடத்தின் இலக்கம் கேஜ/எச்ஓஆர்/2018/886 இல் காட்டப்பட்டுள்ள காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு 'ஏ' - பெருகெட்டியதெனிய மற்றும் பொல்வத்த ஹேன — விஸ்தீரணம்: 0.0139 ஹெக்டயார்**

வடக்கு : மஹரகம வீதி, எல். ஆர். மனுவீர உரிமை கோரும் பெருகெட்டியதெனிய, டீ. எஸ். ஜே. எதிரிசிங்க உரிமை கோரும் பெருகெட்டியதெனிய மற்றும் பொல்லத்தஹேன; கிழக்கு: டீ. எஸ். ஜே. எதிரிசிங்க உரிமை கோரும் பெருகெட்டியதெனிய மற்றும் பொல்லத்தஹேன ; தெற்கு : மஹரகம வீதி ; மேற்கு : மஹரகம வீதி.

07-862